بسمہ تعالیٰ شانہ

# தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்

# تمِلْ ناڈُو مُسلمِ مُنّیِٹْرَ کَزْگَمُ

# TAMILNADU MUSLIM MUNNETRA KAZHAGAM

1650

C1 2/2

22 FEB 2019

**தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் விண்ணப்பம்**

பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

தேதி: 20.02.2019

அனுப்புநர்

**C.O. அம்ஜத் உசேன் (செல்: 9500330124)**
நெ.38, பாக்கியாத் தெரு
மாவட்ட உலமா அணி து.செயலாளர்
தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்
வேலூர்-632004




பெறுநர்

**திரு. பொது தகவல் அலுவலர் அவர்கள்**
தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005
மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம்
மாவட்ட ஆட்சியர் வளாகம்
சத்துவாச்சாரி, வேலூர்-632009

**பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் வேலூர் மாவட்டத்துக்குட்பட்ட அரசு நிதி உதவி / தனியார் / மெட்ரிக் உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகள் சம்பந்தப்பட்ட கீழ் கண்ட தகவல்களை வழங்க உதவ வேண்டி**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வேலூர் மாவட்டத்துக்குட்பட்ட அரசு நிதி உதவி / தனியார் / மெட்ரிக் உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகள் தொடர்பான கீழ்கண்ட தகவல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. வேலூர் மாவட்டத்துக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் தனியார், மெட்ரிக் பள்ளியில் இயங்கும் ஆரம்ப வகுப்பு முதல் இறுதி வகுப்பு வரை வகுப்பு வாரியாக அரசு (2017-2018, 2018-2019) கல்வி ஆண்டுக்கு நிர்ணயம் செய்துள்ள

74/50, Bogipattarai Street, Bangalore Road, Vellore - 632004. E-mail : tmmkvelloredt@yahoo.in (www.tmmk.in)
Head Office, No.7,Vadamariacoir Street, Chennai - 1. Phone : 044 - 25247824 / Fax : 25223868.

Scanned by CamScanner

بسمہ تعالیٰ شانہٗ

# தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்

# تَمِلْ نَاڈُو مُسْلِمْ مُنّیٹْرَ کَزْگَمْ

# TAMILNADU MUSLIM MUNNETRA KAZHAGAM

கட்டணம் பள்ளி வாரியாக தகவல் தரவும், மேற்படி கட்டணம் வசூலிக்க பராமரிக்கப்படும் ஆவண கோப்புகள், பில் ரசீதுகள் சான்றிட்ட நகல்கள் தரவும்.

2. வேலூர் மாவட்டத்துக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் தனியார், மெட்ரிக் பள்ளிகளில் 2018-2019 கல்வி ஆண்டில் வகுப்பு வாரியாக உள்ள மாணவர்கள் எண்ணிக்கை, ஆசிரியர்கள் எண்ணிக்கை, ஆசிரியர் அல்லாத பணியாளர் எண்ணிக்கை, கல்வி தகுதி, பெயர், முகவரி, பள்ளியில் பணியில் சேர்ந்த விவரம், மாத ஊதியம் விவரம் தரவும்.

மேற்படி தகவல்களை பெற தகவல் பெறும் உரிமைச்சட்டம் கட்டணமாக ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லையை ஒட்டி உள்ளேன். மேலும் தாங்கள் அளிக்கும் தகவல்களுக்கும், ஆவண நகல்களுக்கான கட்டணம் செலுத்த தயாராக உள்ளேன் என்று உறுதி அளிக்கிறேன்.

இப்படிக்கு,

Amyath

Scanned by CamScanner